**தலைப்பு 289 – ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 289 – ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தித்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 24 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

**கணக்கீட்டுக் குறைபாடுகள்**

**(அ) மீண்டுவரும் செலவு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் நிவாரணம் மற்றும மாற்றல்கள் செலவு கூட்டுத் தொகை ரூபா 9,153,759 குறைவாக காட்டப்பட்டு இருந்தது. | தவறுதலாக நிவாரணம் மற்றும மாற்றல்கள் செலவு கூட்டுத் தொகை வித்தியாசமானதாக. | வழிகாட்டி பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டும். |
| (ii) | காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டு செலவு கூட்டுத் தொகை ரூபா 6,101,954 கூடுதால காண்பிக்கப்பட்டிருந்தது. | தவறுதலாக ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டு செலவு கூட்டுத் தொகை வித்தியாசமானதாக. | வழிகாட்டி பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டும். |

**(ஆ) ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் திணைக்களத்திற்கு சொந்தமான 112.24 ஏக்கர் (44.9 ஹெக்டயார்) ஆன 18 காணிகள் மற்றும் 70,320 அடி பரப்பளவான 49 கட்டிடங்களின் பெறுமதியை இனங்கண்டு நிதியல்லா சொத்துக்கள் (ஏசீஏ-06 மற்றும் எஸ்ஏ 82) கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. | மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக் கொண்டு பின்னர் கணக்கீடு செய்வதாக. | காணி மற்றும் கட்டிடங்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்திருந்த ரூபா 8,206,747 ஆன நிதியல்லா சொத்துக்கள் நிதிக் நிலைமை பற்றிய கூற்றில் கணக்கீடு செய்திருக்கவில்லை. | மீண்டுவரும் செலவுகளால் கொள்வனவு செய்த நிதியல்லா சொத்துக்கள் எனவும் அவற்றை எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதாக. | நிதியல்லா சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமை | | |
| (அ) | 2003 இன் 22 இலக்க விதைகள் சட்டத்தின் 08(1) பிரவு | - | 2017 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி வரை காலத்தினுள் நில்லம்ப துணை ஆராய்ச்சி மத்திய நிலையம் நாற்றுகளை உற்பத்தி செய்துள்ள போதும் விவசாய பணிப்பாளர் நாயகத்தின் கீழ் பதிவு செய்திருக்கவில்லை. | விதைகள் சட்டத்தில் பதிவு செய்ய தேவையான படிவங்களை விவசாயத் திணைக்கள விதைகள் உறுதி செய்யும் பிரிவிலிருந்து தற்போது பெறப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக எதிர்காலத்தில் விரைவில் நடவடிக்கை எடுப்பதாக. | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | 2022 ஏப்ரல் 26 திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை | 1,130,095 | அத்தியாவசிய சேவை ஒன்றல்லாத முன்னுரிமை வழங்க முடியாத திணைக்கள அலுவலகத்தினுள் மற்றும் அலுவலர்களின் வசதிக்காக 09 சந்தர்ப்பங்களில் பணம் செலவிடப்பட்டிருந்தது. | அத்தியாவசிய செலவுகளை முன்னுர்மைபடுத்திய பின்னர் ஆண்டிறுதியில் எஞ்சியிருந்த ஏற்பாட்டிலிருந்து செய்து கொண்டதாக. | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும |

**2.2 அரச உத்தியோகத்தர்களுக்கு முற்பணம் செலுத்தும் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச உத்தியோகத்தர் முற்பண ''பீ'' கணக்கில் ஓய்வு பெற்ற மற்றும் சேவையை முடிவுறுத்தி இருந்து 09 அலுவலர்களிடம் இருந்து ஆண்டு 01 இற்கும் 03 ஆண்டிற்கும் இடையிலான கால வீச்சளவு முதல் கூட்டுத் தொகை ரூபா 559,607 ஆன கடன் மீதியை அறவிட்டிருக்கவில்லை. | மூன்று அலுவலர்களின் வயது 45 இன் பின்னர் நிரந்தரமாக்கிய காரணத்தால் ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடையை உரித்தற்றதாக்கி உள்ளதாகவும் எதிர்காலத்தில் அரசு மேற்கொள்ளும் வழிமுறைகளின் பிரகாரம் அறவிட நடவடிக்கை எடுப்பதாகவும் 03 அலுவலர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஏனைய மூன்று அலுவலர்களுடனும் கடனை அறவிட கலந்துரையாடுவதாக. | நிலுவை கடன் தவணையை அறவிட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 கடமை பொறுப்புக்களை நிறைவேற்றாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கண்டி மாவட்ட அலுவலகம் அமைந்துள்ள காணி மகாவெலி ஆற்றிற்கு எல்லையாக அமைந்துள்ளதுடன் ஆற்றங்கரை அதிகமாக அறிக்கப்படுவதால் ஆற்றுப் பக்கமாக நிர்மாணித்துள்ள கட்டு, கருத்தரங்கு மண்டபம், மதில் மற்றும் தளப்பரப்பு கற்கள் பரப்பியுள்ள வளவும் வெடித்து கோடுகள் ஏற்பட்டு மண்சரிவு ஏற்படும் உச்ச அபாயத்துடன் காணப்பட்ட போதும் உயிர்கள் | மகாவெலி ஆற்றின் தென் கரையில் 115 மீற்றர் நீள உத்தேச கேபியன் கட்டொன்றை நிர்மாணிப்பதற்குரிய கள பரிசோதனையை மேற்கொண்டு நிர்மாணப் பணிகள் தற்போது பூர்த்தியாக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக ரூபா 138.5 மில்லியனான மொத்த மதிப்பீட்டை தயாரித்து முடித்துள்ளதாக. | சொத்து மற்றும் உயிர் ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்ள வேண்டும். |

மற்றும் சொத்துக்களை பாதுகாத்துக் கொள்ள போதிய நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

## 3.2 எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடைந்து கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏற்றுமதி விவசாய உற்பத்தி பண்ணை, விவசாயிகள், தயாரிப்பாளர்கள் மற்றும் வியாபாரிகளை பதிவு செய்தல் மற்றும் இலங்கையில் மிளகு மற்றும் கருவாவிற்கு புவியியல் சுட்டியை (GI) பெற்றுக் கொள்வற்குரிய செயற்பாடுகளை மேற்கொள்ளும் நோக்கில் 2020 ஆகஸ்ட் 27 திகதியளவில் ரூபா 10,647,000 செலவில் 300 டெப்லட் கணனிகளை கொள்வனவு செய்து 300 நிறுவக மற்றும் கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கி ரூபா 1,505,000 செலவில் கணனி மென்பொருலொன்றையும் அபிவிருத்தி செய்து அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் மீளாய்வாண்டு இறுதியில் டெப்லட் கணனிகளை பெற்றுக் கொண்ட 58 நபர்கள் குறிந்த மென்பொருளை தரவிறக்கம் செய்திருக்கவில்லை. அவ்வாறே குறித்த கணனிகளை பயன்படுத்தி கடந்த 02 ஆண்டுகளினுள் மொத்த கருவா விவசாயிகள் 250,000 இல் 238 பேர்கள் (0.09 சதவீதம்) ஆன மிகக் குறைந்த அளவினரே பதிவு செய்திருந்தனர். அந்த அளவை பதிவு செய்தலை 29 டெப் கணனிகளினால் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டு இருந்தன. அவ்வாறே குறித்த மென்பொருளை பயன்படுத்தி அக் காலத்தினுள் ஏற்றுமதி விவசாய பயிர் உற்பத்தி பண்ணை தயாரிப்பாளர்கள் மற்றும் வியாபாரிகளை பதிவு செய்வது பற்றி கவனம் செலுத்தி இருக்கவில்லை. இவ்வாறே ரூபா 1,505,000 செலவில் மென்பொருளொன்றை அறிமுகஞ் செய்து அதற்காக வருடாந்தம் ரூபா 135,000 வீதம் பராமரிப்பு செலவை செலுத்த வேண்டியிருந்த போதும், கருத்திட்ட நோக்கத்தை அடைந்து கொள்ள மென்பொருளை பயன்படுத்தவில்லை என மேற்கொண்ட கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 12,152,000 செலவில் செயற்படுத்த திட்டமிட்டிருந்த கருத்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 ஏப்ரல் மாதமளவில் 8000 இற்கு அதிகமான அளவு கருவா விவசாயிகளின் தகவல்கள் இந்த டிஜிடல் தொகுதிக்கு சேர்த்துக் கொள்ள முடியுமாகியுள்ளதுடன் 2023 ஆண்டு இறுதியில் 50,000 கருவா விவசாயிகளின் தகவல்களை இத் தொகுதிக்கு உட்படுத்த இலக்கு வைக்கப்பட்டுள்ளதாக . | கருத்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதன் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நாரம்பள உப ஆராய்ச்சி மத்திய நிலையத்தில் ஆய்வுகூடத்திற்கு தொடர்பான புதிய இரண்டு மாடி கட்டிடத்தை நிர்மாணிக்க 2018 ஆண்டில் ரூபா 29,200,000 ஆன மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவிலும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது ரூபா 8,084,500 இற்கான வேலைகள் மாத்திரமே. சுவர்கள் சாந்து பூசுவது போன்ற வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததால் கட்டிடம் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. | புதிய இரண்டு மாடி கட்டிடத்தை நிர்மாணித்தல் 2018 ஆண்டின் போது பல கட்டங்களாக பூர்த்தி செய்யும் எதிர்பார்ப்பில் ஆரம்பித்த போதும் 2019/2020 ஆண்டுகளில் போதிய ஏற்பாடுகள் இல்லாததனால் நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்ய முடியாமலிருந்தது என. | கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்து பயன்படத்த வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் 03 ஆராய்ச்சி நிலையங்களில் உள்ள 17.3 ஏக்கர் காணிகளை எவ்வித ஆக்கபூர்வமான பொருளாதார நடவடிக்கைகளுக்கும் பயன்படத்தாது விளைவற்று காணப்பட்டன. | வல்பிட மற்றும் நில்லம்ப உப ஆராய்ச்சி மத்திய நிலையங்களின் காணிகளை எதிர்காலத்தில் பயன்படுத்த திட்டமிட்டுள்ளதுடன் தெல்பிடிய உப ஆராய்ச்சி மத்திய நிலையத்தை பயன்படுத்துவது செழிப்பற்றதால் அபிவிருத்தி செய்ய அதிக நிதிக் கிரயமொன்றை செய்ய நேரிடுவதாக. | காணிகளை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | திணைக்கள பயன்பாட்டிற்காக 390 ஏக்கர் ஆன 31 காணித் துண்டுகளின் உரிமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இக்காணிகள் தொடர்பான சுவீகரிப்பு நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்றுக் கொண்டு இருப்பதுடன் சில காணிகள் சுவீகரிக்கும் செயன்முறையின் இறுதிக் கட்டங்கள் சிலவற்றில் இருப்பதாக. | காணிகளின் உரிமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | திணைக்களம் பயன்படுத்தும் 34 வாகனங்களின் உரிமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இவ் வாகனங்களில் 18 இனை கமநல அமைச்சின் ஊடாக சுவீகரித்துக் கொள்ள நடவக்கை எடுப்பதுடன் நிதி அமைச்சிற்கு சொந்தமான வாகனங்களில் குறைபாடுகளுடனான 09 கோவைகளை தயாரித்து மீண்டும் அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதாக. | வாகனங்களின் உரிமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அங்கீகரிக்கப்பட்ட ஆளணியை, உள்ளவாறான ஆளணியுடன் ஒப்பிடுகையில் 339 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. அவற்றில் 23 சிரேஷ்ட மட்ட வெற்றிடங்களும், செயற்திட்ட உத்தியோகத்தர் பதவியின் 170 வெற்றிடங்களும் காணப்பட்டதுடன் 84 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி உதவியாளர் பதவிகள் அங்கிகரிக்கப்பட்டிருந்த போதும் அப் பதவிக்காக எவ்வித அலுவலர்களும் ஆட்சேர்க்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 11 பண்ணை முகாமையாளர் பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டன. | எதிர்காலத்தில் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுப்பதாக. | திணைக்கள தேவைபாட்டை கவனத்தில் கொண்டு வெற்றிடங்களை நிரப்ப வேண்டும். |